ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 10.1 – ஒருநல் சுற்றம்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமானுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 10.1 – ஒருநல் சுற்றம்

‡ ஒருநல் சுற்றம் ⋆
எனக்குயிர் ஒண் பொருள் ⋆
வருநல் தொல் கதி ⋆
ஆகிய மைந்தனை ⋆
நெருநல் கண்டது ⋆
நீர்மலை இன்று போய் ⋆
கருநெல் சூழ் ⋆
கண்ண மங்கையுள் காண்டுமே ॥ **10.1.1** ॥

‡ பொன்னை மா மணியை ⋆
அணி ஆர்ந்ததோர் மின்னை ⋆
வேங்கடத்துச்சியில் ⋆
கண்டு போய் ⋆
என்னை ஆளுடை ஈசனை ⋆
எம்பிரான் தன்னை ⋆
யாம் சென்று காண்டும் ⋆
தண் காவிலே ॥ **10.1.2** ॥

வேலை ஆல் இலைப் ⋆
பள்ளி விரும்பிய ⋆
பாலை ஆர் அமுதத்தினைப் ⋆
பைந்துழாய் ⋆
மாலை ஆலியில் ⋆

கண்டு மகிழ்ந்து போய் ⋆
ஞாலம் உன்னியைக் காண்டும் ⋆
நாங்கூரிலே ॥ **10.1.3** ॥

துளக்கம் இல் சுடரை ⋆
அவுணன் உடல் பிளக்கும் மைந்தனைப் ⋆
பேரில் வணங்கிப் போய் ⋆
அளப்பில் ஆர் அமுதை ⋆
அமரர்க்கருள் விளக்கினை ⋆
சென்று வெள்ளறைக் காண்டுமே ॥ **10.1.4** ॥

சுடலையில் ⋆
சுடு நீறன் அமர்ந்ததோர் ⋆
நடலை தீர்த்தவனை ⋆
நறையூர் கண்டு ⋆
என் உடலையுள் புகுந்து ⋆
உள்ளம் உருக்கி உண் ⋆
விடலையைச் சென்று காண்டும் ⋆
மெய்யத்துள்ளே ॥ **10.1.5** ॥

வானை ஆர் அமுதம் ⋆
தந்த வள்ளலை ⋆
தேனை நீள் வயல் ⋆
சேறையில் கண்டு போய் ⋆
ஆனை வாட்டி அருளும் ⋆
அமரர் தம் கோனை ⋆
யாம் குடந்தைச் ⋆
சென்று காண்டுமே ॥ **10.1.6** ॥

கூந்தலார் மகிழ் ⋆
கோவலன் ஆய் ⋆
வெண்ணெய் மாந்தழுந்தையில் ⋆
கண்டு மகிழ்ந்து போய் ⋆
பாந்தள் பாழியில் ⋆
பள்ளி விரும்பிய ⋆
வேந்தனைச் சென்று காண்டும் ⋆
வெஃகாவுளே ‖ **10.1.7** ‖

பத்தர் ஆவியைப் ⋆
பால் மதியை ⋆
அணித் தொத்தை ⋆
மாலிருஞ்சோலைத் தொழுது போய் ⋆
முத்தினை மணியை ⋆
மணி மாணிக்க வித்தினை ⋆
சென்று விண்ணகர் காண்டுமே ‖ **10.1.8** ‖

கம்ப மா களிறு ⋆
அஞ்சிக் கலங்க ⋆
ஓர் கொம்பு கொண்ட ⋆
குரை கழல் கூத்தனை ⋆
கொம்புலாம் பொழில் ⋆
கோட்டியூர்க் கண்டு போய் ⋆
நம்பனைச் சென்று காண்டும் ⋆
நாவாயுளே ‖ **10.1.9** ‖

‡ பெற்றம் ஆளியைப் ⋆
பேரில் மணாளனை ⋆

கற்ற நூல் ⋆
கலிகன்றி உரை செய்த ⋆
சொல் திறம் இவை ⋆
சொல்லிய தொண்டர்கட்கு ⋆
அற்றம் இல்லை ⋆
அண்டம் அவர்க்காட்சியே ‖ **10.1.10** ‖

அடிவரவு — ஒருநல் பொன்னை வேலை துளக்கம் சுடலையில் வானை கூந்தல் பத்தர் கம்பம் பெற்றம் இரக்கம்

ஒருநல் சுற்றம் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்